# 07-01-2025 செய்தி

## 28 மாவட்ட ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் பதவிக்காலம் நிறைவு
## தனி அலுவலர்களை நியமித்து அரசு உத்தரவு

- தமிழகத்தில் 28 மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளான கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றிற்கு 2019-ம் ஆண்டு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நடத்தப்பட்டது.

- இதற்கு முன்னதாக மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு தேர்தல் நடத்தியிருக்க வேண்டும். ஆனால், இது தொடர்பான வழக்கில், "வார்டுகள் மறுவரை செய்யும் பணி, ஊராட்சிகள் பலவற்றை நகர்ப்புற ஊராட்சிகளுடன் இணைக்கும் பணி ஆகியன நடைபெற்று வருகிறது. இப்பணிகள் முடிந்த பிறகே தேர்தல் நடத்த முடியும்" என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தெரிவித்தது. இந்த நிலையில், பதவிக்காலம் முடிவடைந்த மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- கிராம ஊராட்சிகளில் பொது மக்கள் வரி மற்றும் வரியில்லா வருவாய் இனங்களைச் செலுத்துவதற்கு வசதியாக http://vptax.tnrd.tn.gov.in/ என்ற இணையதளத்தில் செலுத்தப்படும் வரிவினங்களைக் கண்காணிக்க வேண்டும்.

- ஊராட்சிக்குட்பட்ட அனைத்து குடியிருப்புகளிலும் சுத்திகரிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் தடையின்றி வழங்குவதை கண்காணிக்க வேண்டும். தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், அரசாணைகள், விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை பின் பற்றி கடமைகள் மற்றும் பொறுப்புகள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் இவ்வாறு அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் 6.36 கோடி வாக்காளர்கள்

**பெண்களே அதிகம்**

- இறுதிவாக்காளர் பட்டியலின்படி தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 6,36,12,950 வாக்காளர்கள் உள்ளனர். அவர்களில் 3,11,74,027 பேர் ஆண்கள், 3,24,29,803 பேர் பெண்கள், 9,120 பேர் மூன்றாம் பாலினத்தவர் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

**சோழிங்கநல்லூர் முதலிடம்**

- தமிழ்நாட்டிலேயே அதிக வாக்காளர்களைக் கொண்ட சட்டப்பேரவைத் தொகுதியாக சோழிங்கநல்லூர் தொகுதி உள்ளது.
- குறைந்த வாக்காளர்களைக் கொண்ட தொகுதியாக நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் பேரவைத் தொகுதி உள்ளது.

| வயது வாரியாக | | வாக்காளர்கள் விவரம் |
|---|---|---|
| 18-19 | | 10,61,556 |
| 20-29 | | 1,09,28,629 |
| 30-39 | | 1,30,19,561 |
| 40-49 | | 1,37,04,815 |
| 50-59 | | 1,12,94,469 |
| 60-69 | | 75,77,253 |
| 70-79 | | 42,61,108 |
| 80 வயதுக்கு மேற்பட்டோர் | - | 17,65,559 |
| மொத்த வாக்காளர்கள் | - | 6,36,12,950 |
| பெண்கள் | - | 3,24,29,83 |
| ஆண்கள் | - | 3,11,74,027 |
| மூன்றாம் பாலினத்தவர் | - | 9,120 |

**அதிகம்-குறைவு**

- அதிக வாக்காளர்கள் கொண்ட பேரவைத் தொகுதி சோழிங்கநல்லூர் - 6,90,958.
- குறைந்த வாக்காளர்கள் கொண்ட பேரவைத் தொகுதி கீழ்வேளூர் - 1,76,505.

SURESH'